REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

மலர் 4] சென்னை: மாசி 17உ வியாழன் (28—2—57) ★ ★ வெளியூர்: மாசி 18உ வெள்ளி (1—3—57) [இதழ் 225

முன்னுக்குப்பின் முரணை சட்டங்கள் எழுதப்படுகின்றன

சி. பி. இராமசாமி கருத்து

குடந்தை, பிப். 25—

"தவறுகள் நிறைந்ததும் முன்னுக்குப்பின் முரணானதும் அவசியமில்லாததுமான சட்டதிட்டங்கள் நமது நாட்டில் இயற்றப்படுவது வருந்தத்தக்க விஷயமாகும். சட்டங்களை உருவாக்குபவர்கள் போதிய அறிவும் திறமையும் இல்லாமலிருந்து ஆளு.

(4-ம் பக்கம் பார்க்க)

தாயகம் பெருமை பெற:

தி. மு. கழக அபேட்சகர்களுக்கு வெற்றி தேடித் தாருங்கள்

தமிழ் மக்கள் வாழ்வுபெற வழி அதுவே!

வாக்காளர் பெருமக்களுக்கு பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பொதுத் தேர்தல்கள் தமிழ் நாட்டில் நாளை மார்ச் முதல் நாளன்று துவங்குகின்றன.

திராவிட நாட்டின் விடுதலை கோரி நிற்கும், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை சட்டசபைக்கு 123 அபேட்சகர்களையும், டில்லி மக்கள் சபைக்கு 13 அபேட்சகர்களையும் நிறுத்தியிருப்பதையும், சட்டசபைக்கு 12 அபேட்சகர்களுக்கும், மக்கள் சபைக்கு 6 பேர்களுக்கும் ஆதரவு தருவதையும் நாட்டு மக்கள் அறிவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் நோக்கங்கள், கடந்த பிப்ரவரி 10-ந் தேதியன்று சென்னையில் நடைபெற்ற கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் பிரகடனத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. நாடெங்கிலும் உள்ள கழகத் தோழர்கள், அந்தப் பிரகடனத்தை மக்களுக்கு தங்கள் வசதிக்கும் ஆற்றலுக்கும் ஒப்ப விளக்கியுள்ளனர்.

நாட்டில் ஜனநாயகம் பிழைக்கவும், சமதர்மம் தழைக்கவும், நல்லரட்சி காணவும் நாட்டு மக்கள் நலிவுகள் நீங்கி, சிறப்பானதோர் வாழ்வு பெறவும் இன்றைய நிலையில் தென்னாட்டு மக்களுக்குள்ள ஒரே வழி, திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்கு வெற்றி தேடித்தருவதுதான்.

எனவே, கழகத்தவரை இந்தத் தேர்தல் நேரத்தில், மாற்றார் எத்தனைதான் இழித்துப்பழித்துப் பேசினாலும், தாக்கினாலும், வீண் பொய் வதந்திகளைக் கிளப்பினாலும், டம்பமான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும் அண்ணா அவர்கள் நமக்குத் தந்துள்ள 'கண்ணியம்—கடமை—கட்டுப்பாடு' என்ற தூய உணர்ச்சியுடன், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், தாயக மக்கள் அனைவரும்—தொழிலாளர்களும் பாட்டாளிகளும், ஏழை எளிய நடுத்தர மக்களும் தங்களுடைய வாக்குகளை தென்னாட்டின் ஒரே தேசீய இயக்கமான திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்கே அளிப்பதின் மூலம், தாயகத்திற்குப் புதியதோர் அந்தஸ்தினைத் தேடித்தரக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழ் மக்கள், தங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தூய தொண்டுள்ளம்கொண்ட தி. மு. கழக அபேட்சகர்களுக்கு மகத்தான வெற்றி தேடித்தருவார்கள் என்று நான் முழுதும் நம்புகிறேன்.

இருள் சூழ்ந்துள்ள தாயகத்தின் எதிர்காலத்தை ஒளிவிடச் செய்ய தங்களது கடமையை தமிழ்ப் பெருங்குடி மக்கள்—வாக்காளர்கள் நாளை துவங்கும் தேர்தல்களில் சரிவர நிறைவேற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

காமராசர்களின் தகுதியற்ற தன்மை

வல்லத்தரசு கண்டனம்

தஞ்சாவூர், பிப். 26—

"சென்னை சர்க்கார் தனது திறமைக் குறைவாலும் தகுதியற்றத் தன்மையாலும், மாநில மக்களின் நன்மைக்காகப் பல துறைகளில் செலவிடப்படுவதற்கு மத்திய சர்க்கார் அனுமதித்த நிதியை முழு அளவில் செலவழிக்காமல் பாழாக்கியிருக்கிறார்கள்"

என்று திரு. வல்லத்தரசு எம். பி. அவர்கள் இங்கு நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கைத்தறித் துணிகள் தேங்கிவிட்டன?

தேர்தல் நேரத்தில் தகவல் கேட்க முனைந்துவிட்டனர்

தமிழ் நாட்டில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் பற்றி சென்னை அரசாங்கத்திற்கு அக்கறை பிறந்துவிட்டதாம்!

இவ்வாறு தேங்கிக் கிடக்கும் துணிகளின் மதிப்பு எவ்வளவு என்பதைத் தெரிவிக்குமாறு கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டிருக்கிறதாம்!

கைத்தறித் துணிகளுக்கு இப்போது அளிக்கப்படும் தள்ளுபடியை ரூபாய்க்கு இரண்டணாவாக உயர்த்தவும் அரசாங்கம் யோசித்து வருகிறதாம்!

டெல்லியின் வஞ்சகத்திற்குத் திரையிட நினைப்போர் தலைதாழ்த்தட்டும்

நெய்வேலித் திட்டத்தை காலந்தாழ்த்த சதி!

ஒதுக்கப்பட்ட நிதி வெட்டப்படுமாம்!

'நெய்வேலியில் வேலை துவங்கிவிட்டோம்; பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுவிட்டது,' என்றெல்லாம் தேர்தல் நேரத்தில் பீத்தித் திரிகிறவர்களைத் தலைதாழ்த்தச் செய்யும் செய்தி ஒன்று புதுடில்லியிலிருந்து கிடைத்திருக்கிறது.

நெய்வேலித் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை வெட்டப்படுமாம்!

இதற்குக் காரணம் வெளிநாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்தவேண்டும் என்றும், முதலீட்டுச் செலவினைக் குறைக்கவேண்டும் என்றும் டில்லி கொண்டுள்ள முடிவு தானும்!

இந்த முடிவுக்கு முதல் பலியாவது நெய்வேலித் திட்டம் தான்!

திட்டம் துவங்கும் முதல் ஆண்டிலேயே, ஒதுக்குவதாகக் கூறியிருந்த நிதி வெட்டப்படுவது, நெய்வேலித் திட்டம் நிறைவேறுவதைக் காலதாமதப்படுத்திவிடும் என்றும் கூறப்படுகிறது.

தி. மு. கழக அபேட்சகர்

★

சட்டசபை

உதகை: சஞ்சீவிராசு

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

இன உணர்வுப் போராட்டம்

வெள்ளையர்களுக்கு எதிராகப் பொருளாதாரப் பகிஷ்காரம்

தென் ஆப்ரிக்கா, பிப். 24—

இரண்டாவதுகட்டமாக, தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்காருக்கு எதிராக ஆப்பிரிக்க மக்கள் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் பொருளாதாரப் பகிஷ்காரம் ஆரம்பித்துள்ளனர். 8 பொருளாதார நிறுவனங்களையும், 6 - வர்த்தக நிறுவனங்களையும் பகிஷ்கரிக்குமாறு ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் கேட்டுக்கொண்டிருக்கிறது.

சிலரக சிகரெட்டுகள், காப்பிக் கொட்டை, தேயிலை, டப்பிகளில் அடைத்த பழவகைகள், சாராய வகைகள், துணிகள், நிலக்கரி ஆகியவை இதில் சேரக்கூடுமாம்.

பல கோடி ரூபாயுடன் வடக்கில் உருவாகும் நிறுவனங்கள்

டில்லி, பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் ஆகிய பகுதிகள் அடங்கிய வடக்குப் பிராந்தியத்தில், 1957 ஜனவரி மாதத்தில், முறையே ரூ. 4,15,00,000; ரூ. 2,51,20,000 அங்கீகரிக்கப்பட்ட மூலதனமுள்ள மூன்று பொது நிறுவனங்களும், 17 தனியார் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் ஒரு பொது நிறுவனமும், இரண்டு தனியார் நிறுவனமும் ரூ. 10 இலட்சத்திற்கும் அதிகமான அங்கீகரிக்கப்பட்ட மூலதனமுள்ளவையாகும்.

வெட்கக்கேடு!

சென்னை, பிப். 26—

"தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது அநேகர் தங்குமிடவசதியில்லாமல் கஷ்டப்படுவதைப் பார்த்தேன். இப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் சர்க்கார் இருந்தும் பிரயோசனம் இல்லை" என்று பத்து ஆண்டுகளாக ஆட்சிபுரியும் காங்கிரசில் கொலுவீற்றிருக்கும் மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசியுள்ளார்.

உதவியே உதவி!

சென்னை, பிப். 26—

சென்னை மாநிலத்தில், பசை தயாரித்தல், தோல் பதனிடுதல் தீக்குச்சி தயாரித்தல், செம்புக் கம்பிகள் தயாரித்தல் ஆகிய தொழில்கள் நடைபெறும் 4 தொழில் நிறுவனங்களுக்கு மத்தியத் தொழில் நிறுவனம் ரூ. 1,44,000 உதவி அளித்துள்ளதாம்.

காங்கிரசாட்சியின் ஒழுங்கீனங்கள்

எதிர்த்துப் போராடத் தனிக் கட்சி

அகாலி தலைவர் தாராசிங் அறிவிப்பு

சாந்திகார், பிப். 27—

ஒழுங்கீனங்களை எதிர்த்துப் போராடுவதற்காகத் தாம் ஒரு புதிய கட்சியையே உருவாக்கப் போவதாக அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் அறிவித்திருக்கிறார்.

"பாரபட்சமற்ற ஒரு நல்ல சர்க்கார் நிறுவப்பட வேண்டும் என நாம் விரும்பினால் முதலில் நாட்டில் ஒழுங்கீனங்களையும் குற்றங்களையும் விரட்டியடித்தாக வேண்டும்"

என்று, அவர், இங்கு நடைபெற்றக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்தலில் மண்ணைக் கவ்வும் மந்திரிகள்

மேலும் ஒருவர் பட்டியலில் இடம் பெறுகிறர்

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மண்ணைக் கவ்வும் காங்கிரஸ் மந்திரிகளின் பெயர்ப் பட்டியலில் மேலும் ஒருவர் பதிவாகியிருக்கிறர்.

அசாமில்

அசாம் மாநில மந்திரியான பைத்தியநாத் முகர்ஜி என்பார் தம்மோடு போட்டியிட்ட முன்னேற்றக் காங்கிரஸ் கட்சி அபேட்சகரிடம் தோல்வி கண்டிருக்கிறர்.

பாதர்கந்தி என்ற அந்த மந்திரியின் தொகுதியில் தனி இடத்திற்குப் போட்டியிட்ட காங்கிரஸ்காரரும் தோல்வி கண்டிருக்கிறர்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—2—57 வியாழன்

நல்ல தீர்ப்பளியுங்கள்!

தமிழ் மக்களாகிய உங்களின் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளுதற்குரிய அரிய வாய்ப்பு மார்ச்சு முதல் தேதி உங்களுக்குக் கிடைக்கிறது. அந்த வாய்ப்பைத் தவறவிட்டு விடாதீர்கள்.

மார்ச்சு முதல் தேதியன்று சிந்தித்துச் செயலாற்ற மறந்துவிடுவீர்களானால், அடுத்த ஐந்தாண்டுக் காலம் வரையில் இதுவரை அனுபவித்திருந்து வந்தது போன்றே, பற்பல விதத் தொல்லைகளுக்கு ஆளாகி அவதிப்பட வேண்டியவர்களாகி விடுவீர்கள். ஐந்தாண்டுக்குப் பிறகு மீண்டும் ஒரு தேர்தல் வருகின்றவரை, உங்களுக்கு நேர இருக்கும் கேடுகளைத் தடுத்துக்கொள்ள முடியாமல் விழிக்க வேண்டியவர்களாவீர்கள்.

ஓட்டுச்சாவடிக்குப் புகுமுன் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள். காங்கிரசு ஆட்சியில் கடந்த பத்தாண்டுக் காலமாக நீங்கள் பெற்றுவந்த இலாப நஷ்டங்கள் என்ன என்பதை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஐந்தாண்டுக்கு முன்பு உங்களுடைய ஓட்டுகளைப் பெற காங்கிரசுக் கட்சியினர் உங்களைக் காணவந்தவர்கள், மீண்டும் இந்தத் தேர்தல் நேரத்தில் தானே உங்களைக் காண வருகிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். இடைக்காலத்தில் உங்களைக்காண அக்கட்சியினர் ஏன் தவறினார்கள்—உங்களை ஏன் அலட்சியப்படுத்தி நடந்துகொண்டார்கள் என்பதையும் கருதத் தவறிவிடாதீர்கள்.

உங்களை வாட்டி வதைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இந்த ஐந்தாண்டு காலமாக ஒன்றும் செய்யவில்லை என்பதை மறந்துவிடாதீர்கள்.

உங்கள் வருமானத்தை உயர்த்துவதற்கான வழிவகைகளைச் செய்ய காங்கிரசு ஆளவந்தார்கள் தவறிவிட்டார்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

மூல உணவுப் பொருளான அரிசி முதல் ஏனைய உணவுப் பொருட்கள் அனைத்தும் உங்களால் வாங்கி உண்ணமுடியாத அளவிற்கு இவர்கள் ஆட்சியில் விலை உயர்ந்து கொண்டே போவதைச் சிந்தியுங்கள்.

ஆடைகளின் விலையும் குறைவதற்குப் பதிலாகக் கூடிக்கொண்டே போவதையும் நினைத்துப் பாருங்கள்.

இவர்கள் ஆட்சியில், விவசாயத்திற்கு அடுத்த பெருந்தொழிலாக உள்ள கைநெசவுத் தொழிலுக்கு அடுத்தடுத்து வரும் ஆபத்துக்களை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள்.

அதன்பலனாக இலட்சக் கணக்கான நெசவாளர்களின் வாழ்வு சீரழிந்துக்கொண்டே போவதையும் சிந்திக்கத் தவறிவிடாதீர்கள்.

நெசவாளர்களின் வருமானத்தை உயர்த்தப்போகிறோம் எனப் புகல் கூறிக்கொண்டு விசைத்தறியைப் புகுத்தி, நெசவுத் தொழிலை ஒரேயடியாக ஒழித்துக்கட்ட காங்கிரசு ஆளவந்தார்கள் திட்டமிட்டிருப்பதை மறந்துவிடாதீர்கள்.

தேர்தல் முடிந்ததும், நெசவாளர்களைப் பட்டினிபோட்டுக் கொல்லக்கூடிய விசைத்தறித் திணிப்பை மேற்கொள்ள காங்கிரசு அரசாங்கம் தீர்மானித்திருப்பதை மறந்துவிடாதீர்கள்.

கல்வித் துறையில் தலையிட்டு அடிக்கடி விரும்பத் தகாத மாற்றங்களைச் செய்து, மக்களின் கல்வி நலனைப் பாழ்படுத்திவரும் இந்தக் காங்கிரசு அரசாங்கத்தின் அறியாமையை எண்ணிப் பாருங்கள்.

இந்தி மொழி ஆதிக்கத்திற்கு உடந்தையாக இருந்துவரும் இந்தக் காங்கிரசு ஆளவந்தார்களின் இந்தி மோகத்தைக் கருதத் தவறிவிடாதீர்கள்.

இந்தப் பத்தாண்டுக் காலக் காங்கிரசு ஆட்சியில், மக்களுக்கு வயிறார உண்ணச்சோறு கிடைக்கவில்லை; அனைவருக்கும் உடுத்திக்கொள்ளக் குறைந்த விலையில் ஆடை கிடைக்கவில்லை; குடியிருக்கக் குடிசையும்கூடக் கிடைக்கவில்லை.

வயது வந்தும் வேலையற்றோர் தொகை கூடியிருக்கிறது—படித்துப் பட்டம் பெற்றவர் வேலையற்று வாடிக் கிடக்கின்றனர்—இதற்கான பரிகாரம்தேட இயலாத நிலையில் இங்குள்ள காங்கிரசு ஆட்சி இருந்துவருகிறது.

சேலத்து இரும்பு பயன்படுத்தப்படாமலே இவர்கள் ஆட்சியில் இருந்துவருகிறது.

அலுமினியத் தொழிற்சாலை இன்னும் துவங்கப்படவில்லை.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை மத்திய அரசாங்கத்திடம் இந்த ஆட்சி ஒப்படைத்துவிட்டிருக்கிறது.

ஒரு கல் அளவிற்கேனும் புதிய புகைவண்டிப் பாதை பொதுவாகத் தென்னாட்டிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் அறவே போடப்படவில்லை.

இதுபற்றி இந்தக் காங்கிரசு ஆளவந்தார்கள் வாய்மூடிக் கிடக்கின்றார்கள்.

கொடிக்கால் விவசாயிகளுக்கு உதவ முன்வரவில்லை இந்த அரசாங்கம்.

பத்தாண்டுக்காலமாக ஆண்ட பிறகும்கூடத் தமிழ் மக்களின் வாழ்வில் வளத்தை உண்டாக்க முடியவில்லை இந்தக் காங்கிரசு ஆட்சியினால்.

மீண்டும் இவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதா?

ஒப்படைப்பது முறையாகுமா?

கையாலாகாத ஆட்சி எனத் தெளிவாகத் தெரிந்துகொண்ட பின்னருங்கூட, மீண்டும் ஒருமுறை இவர்களிடம் ஆட்சியை ஒப்படைப்பது நியாயமாகுமா?

தமிழ் நாட்டுத் தொழில் வளர்ச்சியில் காங்கிரசு ஆளவந்தார்களுக்கு அக்கரை கடுகளவும் இல்லை—தமிழ் மக்கள் நலங்காப்பதில் இவர்களுக்கு நினைப்பில்லை — அவர்களுடைய பத்தாண்டுக்கால ஆட்சி மேற்படி உண்மையைத்தான் நமக்கெல்லாம் விளக்கமாக உணர்த்துகிறது.

எனவே, வாக்காளர்களே, மீண்டும் ஒருமுறை காங்கிரசு ஆட்சியிடம் நாடாளும் பொறுப்பை ஒப்படைக்காதீர்கள்.

முடிவைத் துணிந்து நிறைவேற்றுங்கள்.

அதற்குரிய அரிய வாய்ப்பு மார்ச்சு முதல் தேதி.

திராவிட முன்னேற்றக் கழகம், உங்கள் நல்வாழ்வில் அக்கரை கொண்டுள்ள கழகம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்துள்ள கழகம், முன்னேற்றக் கழகம்தான் என்ற உண்மையை நீங்கள் அறியாததல்ல.

எனவே, மார்ச்சு முதல் தேதி, தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்து வெற்றி பெறச் செய்யுங்கள். வாக்காளர்களே! அதுதான் உங்கள் தேசியக் கடமை; மறந்துவிடாதீர்கள். நல்ல தீர்ப்பு அளியுங்கள்.

'வெள்ளுடை வேந்தன்'-பெயர்பெற்ற சுவையான வரலாறு

பழி சுமத்துவோருக்குத் தரும் பதில்

காஞ்சியில் அண்ணு கருத்துரை

கடந்த 22-ந் தேதியன்று நடைபெற்ற காஞ்சீபுரம் தியாகராயர் மன்ற ஆண்டு விழாவில் அண்ணு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"தமிழகத்தினுடைய நல்வாழ்வுக்காக முதல் முதல் பாடுபட்டவருடைய பெயரால், இங்கே ஒரு மன்றத்தை ஆர்வமுள்ள இளைஞர்கள் துவக்கி ஓராண்டுக் காலம் வரையிலே, நடத்திக் கொண்டு வருவது பெருமைப் படத்தக்க காரியமாகும். இந்தத் தலைமுறையிலே உள்ளவர்களுக்கு மறைந்த தியாகராயருடைய அருமை பெருமைகள் அவ்வளவாகத் தெரிந்திருக்க முடியாது.

"ஆனால், இப்போது 60 வயது சென்றிருக்கின்ற பெரியோர்களை—அரசியலிலே அனுபவப்பட்டவர்களை நீங்கள் கேட்டுப் பார்த்தால், அவர்கள் எல்லாம் சர். தியாகராயர் தமிழகத்திற்கு எத்தகைய நல்ல செயல்களைச் செய்தார் என்பதை நன்றாக உங்களுக்கு விளக்கிச் சொல்வார்கள்.

"இன்றைய தினம் நாட்டிலே உள்ள எல்லா கட்சிகளும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக, பல்வேறு வகையிலே பணி ஆற்றிக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். அதிலே ஒரு கட்சிக்கு ஒரு கட்சி போட்டி இருந்துகொண்டிருக்கின்றது. ஆனால் கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு, முதல் முறையாகத் தமிழகத்திலே பாடுபட்டவர் யார் என்றால், மறைந்த மாவீரர் சர். தியாகராயர் அவர்கள்தான்; தறியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குக்கூட அது அவ்வளவாகத் தெரியுமோ தெரியாதோ—என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை; அவர்தான் தமிழகத்திலே—குறிப்பாக நெசவாளர்கள் வாழுகின்ற பகுதியில், கைத்தறி நெசவாளர்களுக்குள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கும் பலவகையிலேயும் பாடுபட்டார்.

"இலட்சக் கணக்கிலே சொத்து இருந்த சர். தியாகராயர் இறந்துபோகிற நேரத்தில், உண்மையிலேயே, தம்முடைய மாளிகையை அடகு வைத்துவிட்டு மாண்டுபோகவேண்டியவரானார். அவ்வளவு செல்வாக்கும் செல்வமும் படைத்திருந்த அவருடைய செல்வமெல்லாம் மக்களுக்காகச் செலவிடப்பட்டு, அவருடைய சந்ததியினர் இன்று பல இடங்களில் பல்வேறு துறை வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

"ஏன் நான் இதைச் சொல்லுகின்றேன் என்றால் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் கொள்ளை அடித்தார்கள்—பணத்தாலே கொழுத்தார்கள் என்றெல்லாம் அரசியலைப் பற்றி நுணுகி ஆராயாமல் பலர் பேசிக்கொண்டு வருகிறார்களே, அவர்களுக்குத் தெளிவு படுத்துவதற்குத்தான்.

"ஜஸ்டிஸ் கட்சியின் மாபெருந் தலைவர்களிலே தலைசிறந்தவரும் தமிழ் நாட்டு அரசியல் வாழ்விற்கு முதல் முதல் மறுமலர்ச்சி தந்தவரும் கைத்தறி நெசவாளர்களுடைய இஷ்டங்களை முதல் தடவையாக உணர்ந்தவரும் பார்ப்பனரல்லாதாருக்குப் படிப்பு வேண்டும்—படித்தவர்களுக்கு நல்ல வேலை வேண்டும்—பார்ப்பனர்களுக்குச் சமமாக அவர்கள் எல்லாத்துறையிலும் சிறந்திருக்க வேண்டும்—என்றெல்லாம் எடுத்துச் சொன்னவருமான சர். தியாகராயர் அவர்கள் அரசியலிலே ஈடுபட்டதன் காரணமாக—ஜஸ்டிஸ் கட்சியிலே நுழைந்ததின் காரணமாக—ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராய் இருந்ததின் காரணமாக தன்னுடைய சொத்தைப் பாழாக்கிக்கொண்டு, இன்றைய தினம் அவருடைய குடும்பத்தார் உண்மையிலேயே பண வசதியற்று இருக்கின்றார்கள்.

"இன்றைத் தினம் காங்கிரஸ் ஆட்சி நாட்டிலே ஏற்பட்ட பிறகு வெள்ளைக்கார ஆட்சியினிடத்திலே காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் ஒரு துளியும் தங்களுடைய மரியாதையை விட்டுக் கொடுக்காமல், சுயமரியாதைக்காகப் போராடினார்கள் என்று, நீங்கள் எல்லாம் மேடையிலே கேட்டிருக்கிறீர்கள். இந்தப் பரம்பரைப் பழக்கத்தை, முதல் முதல் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியவர் சர். தியாகராயர் என்று நான் சொன்னால், இளம் அரசியல்வாதிகள் உண்மையிலேயே அது பொய் என்று கருதுவார்கள்—பழைய அரசியல்வாதிகள் ஆச்சரியப்படுவார்கள்—பொதுமக்கள் வியப்படைவார்கள்.

"ஒரு சந்தர்ப்பத்திலே, சென்னை நகருக்கு, அப்பொழுது இருந்த வெள்ளைக்கார இளவரசர் வருகை தந்தார். அவரை வந்து பார்க்க விரும்பும் சீமான்களும் சீமாட்டிகளும் என்னென்ன மாதிரி உடை அணிய வேண்டும் என்று வெள்ளைக்கார சர்க்கார் கருதினார்களோ, அதைப்போன்ற உடை அணிந்துகொண்டு சென்றால்தான் இளவரசரைப் பார்க்க முடியும் என்று சர்க்கார் ஒரு விதி செய்திருந்தார்கள்.

"அந்த நாட்களில், வெள்ளைக்கார நாட்டிலே இருந்து யாராவது ஒரு அதிபர் வந்தார் என்றால்—ஒரு கோமகன் வருகின்றார் என்றால்—ஒரு சீமான் வருகிறார் என்றால்—ஒரு பெரிய கவர்னரோ வேறு ஒரு அதிகாரியோ வருகிறார் என்றால், அவரைப் பேட்டி காண்பதற்குப் பிறவியின் பயன் இருந்தால்தான் முடியும் என்று கருதினார்கள். அப்படிப்பட்டக் காலத்தில் அப்படிப்பட்ட இளவரசரைப் பார்க்க வேண்டுமானால், கருப்பு உடை அணிந்து-ஆங்கில நாட்டு முறைப்படி உடை அணிந்துகொண்டு, தலையிலே வெள்ளைக்காரர்கள் அணிவது போன்ற தொப்பி அணிந்து கொண்டு வந்தால்தான் அந்த வெள்ளைக்கார நாட்டு இளவரசரைச் சந்திக்க முடியும் என்று அவர்கள் விதி செய்திருந்தார்கள்.

"தியாகராயர் அந்த நாட்களிலேயே பெரிய தலைவர் என்ற காரணத்தாலே இளவரசரை வந்து சந்திக்கும்படி அவருக்கு அழைப்புச் சென்றது. அந்த அழைப்பைப் பார்த்துத் தியாகராயர் சொன்னார்—'நானாக இளவரசரைப் பார்க்கவேண்டும் என்று விருப்பப்படவில்லை; இளவரசர் இந்த நாட்டுக்கு வருகின்ற நேரத்தில், இந்த ஊரிலே உள்ள முக்கியஸ்தர்களை அவர் பார்க்க விரும்புகின்றார்; அப்படி பார்க்க விரும்புகின்ற இளவரசர், அவரவர்கள் எப்படி வருகிறார்களோ அப்படித்தான் அனுமதிக்கவேண்டுமே தவிர, இவர் பார்க்க விரும்புகின்ற முறைப்படி வர வேண்டுமானால், இளவரசரைப் பார்க்கமாட்டேன்' என்று சொல்லி, அவர் எப்பொழுதும் அணிந்து கொண்டிருந்த வெள்ளை நிற கோட்டும், வெள்ளை நிறத்திலே இருக்கிற தலைப்பாகையும், வேட்டியும் அணிந்துகொண்டு, 'இந்த உடையிலே வருவேன்; என்னை வரவேற்றுப் பேச இளவரசர் பிரியப்பட்டால் வரவேற்கட்டும்; இல்லையென்றால் நான் அவர் பேசுவதைப் பத்திரிகையிலே பார்த்துக்கொள்ளுகின்றேன்; நான் வரமாட்டேன்,' என்று துணிந்து சொன்னார்.

"இன்றையத் தினம் காந்தியாருக்குப்பின் அப்படிப்பட்ட கடுமையான முறையில் பேசுவதற்குப் பலருக்கும் அந்தத் துணிவு ஏற்பட்டது. நான் சொல்லுகின்றகாலம், வெள்ளைக்காரர் காலம் என்றால் 'விஷ்ணுவின் அவதாரம்,' என்று கருதிக்கொண்டிருந்த காலம்! நான் சொல்லுகின்ற காலம் வெள்ளைக்காரனிடத்திலே பீரங்கி இருக்கின்ற காரணத்தாலே, அவனை யாரும் ஒன்றும் செய்ய முடியாதென்று மக்கள் மனதிலே பீதி இருந்த காலம்! செங்கோல் சிறந்ததா, சங்கீதம் சிறந்ததா என்று நாட்டு மக்கள் பழைமை பேசிக்கொண்டிருந்த காலம்! அப்படிப்பட்ட காலத்தில் சர். தியாகராயர் அவர்கள்—'அப்படிப்பட்டகாலத்தில்' என்றுநான் சொல்லுவதைவிட, உங்களுக்கு நான் கொச்சையாகச் சொல்ல வேண்டுமானால் நம்முடைய பாட்டனார் காலத்தில், சர். தியாகராயர் அவர்கள், 'நான் வெள்ளை ஆடை அணிந்துதான் இளவரசரைப் பார்க்க வருவேன்; பிரியமிருந்தால் பார்க்கட்டும்; இல்லையானால் பார்க்கத் தேவையில்லை' என்று துணிந்து சொன்னவர்.

"அந்த நாள் முதல் அவருக்கு சர். தியாகராயர் என்ற பெயரோடுகூட, 'வெள்ளுடை அணிந்த வேந்தன்' என்ற பட்டப் பெயரைத் தமிழர்கள் சூட்டி மகிழ்ந்தார்கள்.

"நான் என் அவைகளை எல்லாம் உங்களுக்குக் கவனப்படுத்துகின்றேன் என்றால், ஜஸ்டிஸ் கட்சிக்காரன் என்றால், ஏதோ வெள்ளைக்காரனுக்குக் குலாம்களாக இருந்தவர்கள்—வெள்ளைக்காரன் சென்ற வழியிலேயே சென்றவர்கள் என்று கருதிக்

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் நிதி தாரீர்!

வரவு	ரூ.	அ.	பை
27—2—57 இதழ்ப்படி	...61,519	9	7
திருச்செங்கோடு பகுத்தறிவுப் படிப்பகம் ...	5	0	0
வாஞ்சியூர் 'தினமலர்' அலுவலகத் தோழர்கள் ...	5	13	0
நெல்லை—முக்கூடல் தி. மு. கழகம் ...	50	0	0
சிங்கப்பூர் அம்பலவாணன் ...	68	7	9
சிங்கப்பூர், மெக்ஸ்வெல் ரோடு ஏ. தனபால்' ...	135	0	0
சென்னை-எருக்கமாநகர் எஸ். ஆர். ராதா —எ. ஜே. பாலன் மூலம்; ...	5	0	0
அசாம்-பாண்டுரோஷ்ட் கேம்ப் அலுவலகம் —எஸ். பானு மூலம்; ...	8	9	0
தென்னாற்காடு-திருக்கோயிலூர் தி. மு. கழகம் —செ. வி. கீர்த்தி மூலம்: ...	40	0	0
தென்னாற்காடு-சோபனபுரம் தி. மு. கழகம் ...	15	0	0
விருதை-செந்திக்குமாரநல்லூர் தி. பிச்சை ...	1	0	0
,, ம. இளங்கோ ...	1	0	0
திருச்சி-மருவத்தூர் தி. மு. கழகம் ...	24	10	0
சிங்கப்பூர் ஆ. ம. சிவபுண்ணியம் ...	110	0	0
மலேயா-பான் மலாயான் திராவிட மன்றம் செயலாளர் ...	165	0	0
பினாங்கு அண. சேதுராமன் ...	94	12	0
சென்னை-தங்கசாலை கா. திருவேங்கிடம் ...	5	0	0
10—2—57-ல் எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்ற தி. மு. க. தேர்தல் சிறப்பு மாநாடு டிக்கெட் வசூல்	...4,592	10	9
கே. பழனி பஞ்சாங்-சிங்கப்பூர் ...	75	0	0

ஆக மொத்தம் ரூ. **66,921-8-1**

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13.

வாக்குப்பதிவு நிலையங்களில் ஏஜெண்டுகள் பணி

அபேட்சகர்களின் கவனத்திற்கு:

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் ஒவ்வொரு வாக்குப் பதிவு நிலையத்திலும் ஒரு ஏஜெண்டையும் இரண்டு மாற்று ஏஜெண்டுகளையும் நியமிக்கலாம். ஆனல் ஒரே நேரத்தில் ஏதாவது ஒரு ஏஜெண்டு மட்டும்தான் வாக்குப் பகுதிவு நிலையத்தில் வேலைசெய்ய முடியும். இந்த ஏஜெண்டுகள் நியமனம் பற்றிய தகவல்கள் குறிப்பிட்ட ஒரு நகல் பத்திரத்தில் எழுதித் தரப்பட வேண்டும். அவற்றுள் ஒன்று தேர்தல் அதிகாரியிடம் தரப்பட வேண்டும்; மற்றொன்று, வாக்குப் பதிவு நிலைய அதிகாரியிடம் காண்பிப்பதற்காக ஏஜெண்டிடம் தரப்பட வேண்டும். இந்த நகல் பத்திரத்தை குறிப்பிட்ட ஏஜெண்டு, குறிப்பிட்ட வாக்குப் பதிவு நிலைய அதிகாரியிடம் காண்பிக்காவிட்டால், அங்கு அவர் அனுமதிக்கப் படமாட்டார்.

வாக்குப் பதிவு நிலையங்களில் 'போலிங் ஏஜெண்டு'கள் கடமை

வாக்குப் பதிவு நிலையங்களில் ஆள் மாருட்டம் நடப்பதைக் கண்டுபிடிப்பதிலும், பதிவுக்கு முன்னும் பின்னும் வாக்குப் பெட்டிகள் சரியாகச் 'சீல்' செய்யப்பட்டிருக்கிறதா என்று சரி பார்க்கவும், வாக்குப் பதிவு சம்பந்தமான குறிப்புகளனைத்தும் சரியான முறையில் பாதுகாக்கப் பட்டுள்ளதா என்று பார்க்கவும் அதிகாரிக்குத் துணை புரிதல்.

தேர்தல் ஏஜெண்டு தன்னை 'போலிங் ஏஜெண்டா'க நியமித்ததற்கு அத்தாட்சியாகக் கொடுத்த கடிதத்தை பதிவு நாளில் கொண்டுவரவேண்டும்.

வாக்குப் பதிவு நடைபெறும் நாளுக்கு முந்தின தினம், தேர்தல் அதிகாரி பதிவு நிலையம் அமைக்கப்படும் இடத்தில் இருப்பார். அவரிடம் சென்று தங்களுக்குத் தேவையான விவரங்களைப் போலிங் ஏஜெண்டுகள் தெரிந்துகொள்ளலாம்.

போலிங் ஏஜெண்டுகள் குறிப்பிட்ட நேரத்தில் வாக்குப் பதிவு நிலையங்களுக்கு வந்துவிடவேண்டும்; அவருடைய வருகைக்காக பதிவு நிலைய அதிகாரி காத்துக் கொண்டிருக்கமாட்டார்.

ஒவ்வொரு போலிங் ஏஜெண்டும் வாக்குப் பதிவு நிலையத்திற்கு வரும்போது (1) தமது நியமன அத்தாட்சிக் கடிதம் அந்தப் பதிவு நிலையத்தைச் சேர்ந்த வாக்காளர் பட்டியல் இறந்து போனவர்கள், ஊரில் இல்லாதவர்கள் ஆகியோரது பட்டியல், ஒரு சிறிய பித்தளை சீல், ஒரு பேனு, ஒரு பேன்சில் ஆகியவைகளைக் கண்டிப்பாக எடுத்துச் செல்லவேண்டும்.

வாக்குப் பதிவு நிலையத்திலோ, அதற்கருகில் 100 கெச தூரத்திற்குள்ளோ, போலிங் ஏஜெண்டு ஏதாவது ஒரு கட்சியின் தலைவர் படம் பொறித்த அல்லது குறிப்பிட்ட கட்சி ஒன்றின் கொடி பொறிக்கப்பட்ட 'பாட்ஜ்' அணிந்திருப்பது கூடாது; அவ்வாறு செய்தால் ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படுவர்.

ஆனல், அவர் விருப்பப்பட்டால், தேர்தலில் நிற்கும் தம் கட்சியின் சின்னத்தையோ அல்லது தாம் ஏஜெண்டாக இருக்கும் அபேட்சகரின் சின்னத்தையோ பொறித்த சிறு 'பாட்ஜ்' அணிந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு போலிங் ஏஜெண்டும், வாக்குச் சாவடிக்கு வந்ததும் தமது நியமனக் கடிதத்தை அதிகாரியிடம் கொடுத்துவிட வேண்டும். அவர் அதில் கையொப்பமிட்டானதும் ஏஜெண்டுக்கு ஒரு 'பாஸ்' தருவார். இதை வைத்திருந்தால்தான் போலிங் ஏஜெண்டு வாக்குச் சாவடிக்குள் நுழைய முடியும்.

வாக்குப் பதிவு நடைபெற இருக்கும் நாளில், தேர்தல் அதிகாரி, வைக்கப்பட்டுள்ள எல்லா அபேட்சகர்களின் பெட்டியையும் ஏஜெண்டுகளுக்குக் காண்பிக்கும் போது, பெட்டிகளை நன்ருகச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். ஏதேனும் பெட்டிகளில் தவறு இருந்தால் தக்க காரணங்களைக் காட்டி அதனைத் திருத்திக் கொள்ள அதிகாரியைக் கோரலாம்.

வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளின் எண்ணிக்கை—போட்டியிடும் அபேட்சகர்களின் எண்ணிக்கையையும் சரிபார்த்துக் கொண்டு, பெட்டிகள் ஒவ்வொன்றிலும் சரியான முறையில் சின்னங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

வாக்குப் பதிவு நடைபெறும் போது ஆள் மாருட்டம் செய்து கள்ளத்தனமாக வாக்குப் பதிவு நடைபெறுவது 'போலிங் ஏஜெண்டு'க்கு நிச்சயமாகத் தெரிந்தால், அந்த இடத்திலேயே அதிகாரியின்முன் ரூ. 2 கட்டி 'சாலஞ்ச்' செய்து கொள்ளலாம். ஆனல் தாம் செய்து கொள்ளும் 'சாலஞ்ச்' நிரூபிக்க போலிங் ஏஜெண்டு போதுமான அத்தாட்சிகளைக் காட்டவேண்டும். போதுமான அத்தாட்சி இல்லாது அது நிராகரிக்கப்படுமானல், போலிங் ஏஜெண்டு தாம் டெபாசிட் கட்டின ரூ. 2-ம் இழந்துவிடுவார்.

இமயத்திலுள்ள உயர்ந்த சிகரங்களை எட்ட முயற்சி

இமயத்திலுள்ள மனிதச் சுவடு படாத உயர்ந்த சிகரங்களை வெற்றிகொள்ள ஒரு சில ஆங்கிலேயர்கள் திட்டமிட்டிருக்கிருர்கள். இவர்களில் பலர், 1953-ல் எவரெஸ்டை வெற்றிகொண்ட பிரிட்டிஷ் குழுவிலிருந்தவர்கள்.

சார்லஸ் இவான்ஸ், டெனிஸ் டேவிஸ் என்பவர்கள் அடுத்த மாதத்தில், 26,041 அடி உயரமுள்ள அன்னபூர்ணு (-2) சிகரத்தை எட்ட முயலுவார்கள்.

மேஜர் தாமஸ் ராபர்ட்ஸ் தலைமையில் ஒரு குழுவினர் மத்திய நேபாளத்திலுள்ள நாசேபூச்ரே (22,985 அடி உயரம்) சிகரத்தை வெற்றிகொள்ள முயலுவார்கள்.

இராணுவச் செலவு குறைக்கப்பட்டது

'பஞ்சசீலம்' பேசுவோர் ஆட்சியில் அல்ல!

ஹாங்காங், பிப். 27—

மக்கள் சீனு, இராணுவச் செலவில் மூன்றில் ஒரு பங்கை குறைத்துக் கொண்டுவிட்டதாம்; மேலும், அரசாங்கத்தின் நிர்வாகச் செலவையும் குறைத்துக் கொள்ளுவதற்கான துறைகளை ஆராய்ந்து வருகிறதாம்.

நாட்டின் பொருளாதாரச் சீரமைப்புக்கு அதிகப்படியான நிதி வசதி ஏற்படவே இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

காங்கிரசு ஏழைகளை மறந்துவிட்டது

தி. மு. கழகமே நாட்டுக்கு நல்லது செய்ய முடியும்

என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து முன்னுள் காங்கிரஸ்காரர் என். இ. நாராயணபிள்ளை கருத்துரை

'முன்னுள் காங்கிரஸ்காரனுன நான் இந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று கடந்த பதினைந்து நாட்களாகச் சிந்தித்தேன். என்னிடம் வந்து காங்கிரஸ்காரர்கள் ஆதரவு கேட்டனர்; தி. மு. கழகத்தைச் சேர்ந்த நடராசன் ஆதரவு கேட்டார்; இன்னும் பலர் கேட்டனர்; ஆனல், நான் பதினைந்து நாட்களாகத் தீவிரமாகச் சிந்தித்தபின், இன்றைய நிலையில் தி. மு. கழகமே நாட்டுக்கு நல்லது செய்ய முடியும் என்பதை உணர்ந்து நடராசனுக்கு ஆதரவுதரச் சம்மதித்தேன்.

"காங்கிரஸ் இன்று ஏழை எளிய மக்களை மறந்து, அவர்களுக்கு வாழ்வு தரத் தவறிவிட்டது என்பதால் என்னுடைய முடிவு தி. மு. கழகத்திற்கே ஆதரவு தரவேண்டும் என்பதாக அமைந்தது,"

என்று, முன்னுள் காங்கிரஸ்காரரும் இன்று எந்தக் கட்சியிலும் இல்லாது இருக்கும் திரு. என். இ. நாராயணப்பிள்ளை அவர்கள், சென்னையில், கடந்த வாரம் திரு. என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். தோழர்கள் சிட்டிபாபு, சி. பஞ்சாட்சரம், என். வி. நடராசன், ஆர். எஸ். பாண்டியன், க. அன்பழகன் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினர்.

(ந-நி,)

'கிராம அதிகாரிகள் குறை களைய தி. மு. கழகமே கவலைப்படுகிறது'

'காங்கிரசுக்கு எங்கள் ஆதரவு கிடையாது'

கள்ளக்குரிச்சி வட்ட கிராம அதிகாரிகள் பேரவைக் கூட்டத்தில் ஒருமித்த முடிவு

மார்ச் 15-ல் வேலை நிறுத்தம் செய்வர்?

வடக்குநந்தல், பிப். 26—

"காங்கிரஸ் நம்மைப் பற்றி கனவிலும் கருதவில்லை. இதை அவர்களுடைய தேர்தல் அறிக்கையே தெளிவாகக் காட்டுகிறது. ஆனல் நாம் இதுவரை கனவிலும் எண்ணிப் பாராத திராவிட முன்னேற்றக் கழகம்தான் நம்முடைய குறைகளைக் கவனித்து விளக்கியிருக்கிறது.

"காங்கிரசுக்கு நாம் செய்துள்ள நன்மைகள் பலப்பல. இதைக் காங்கிரசும் தெளிவாக உணர்ந்தே இருக்கிறது. என்ருலும் நம்மைப் பற்றிய கவலை காங்கிரசுக்கோ, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கோ கொஞ்சங்கூட இருப்பதாகத் தெரியவில்லை. நாம் செய்த நன்மைகளை யெல்லாம் இன்று காங்கிரஸ் மறந்து நன்றி கெட்டத் தன்மையில் இருப்பதை நாமெல்லாம் அறிவோம். ஆனல் இதுவரை நாம் யாரைப்பற்றி கவலைப்படாமல் இருந்தோமோ, அதே திராவிட முன்னேற்றக் கழகம் நம்மைப்பற்றி—நமது குறைகள் பற்றிக் கவலைப்படுகிறது. அப்படிப்பட்ட தி. மு. கழகத்திற்கு நாம் என்ன கைம்மாறு செய்வோம்? செய்யவேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் வருகிற தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டுப் போடாமல் கழகத்தை ஆதரிப்பது"

இவ்வாறு, தென் ஆற்காடு மாவட்டக் கிராம அதிகாரிகள் சங்கத் தலைவர் திரு. வி. கே. எஸ். தேசிகாச்சாரியார், கள்ளக்குரிச்சி வட்ட கிராம அதிகாரிகள் சங்கப் பேரவைக் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்தக் கூட்டம், நேற்று பிற்பகல் இங்குள்ள சீனிவாசா டாக்கிசில், திரு. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் திரு. கே. பி. நெடுமாறன் பேசுகையில், 'கடந்த இரண்டு வாரங்களுக்குமுன் ஈரோட்டில் நடைபெற்ற நமது சங்க மாநாட்டுத் தீர்மானப்படி மார்ச் 15-ல் நாம் அனைவரும் பொது வேலைநிறுத்தம் செய்வோம்' என்று கேட்டுக்கொண்டார்.

(ந.-நி.)

அண்ணுவுக்கு காங்கிரஸ் தியாகிகள் ஆதரவு

நாளுக்கு நாள் பெருகிவருகிறது

பி.பி.சம்பந்தம்,கண்ணன் ஆகியோர் தீவிர பணி

காஞ்சித் தொகுதியில் போட்டியிடும் அண்ணு அவர்களுக்கு காங்கிரஸ் தியாகிகளின் ஆதரவு பெருகிவருகிறது.

அவர்கள், காங்கிரஸ் ஆட்சியில் மலிந்துவிட்ட தன்னலப் போக்கு ஊழல்கள், மக்களை மதியாத மமதை இவை கண்டு மனம் நொந்தவர்களாய், காங்கிரசிலிருந்து வெளியேறி அண்ணு அவர்களுக்குத் தீவிரமாகவும், உற்சாகத்துடனும் பாடுபடுகின்றனர்.

நகர காங்கிரஸ் கமிட்டியைச் சேர்ந்த பி. பி. சம்பந்தம் அவர்கள் காங்கிரசிலிருந்து விலகி, அண்ணு அவர்களின் வெற்றிக்காகத் தீவிரமாகப் பணியாற்றி வருகிருர்.

அதேபோல பழக்கடைக் கண்ணன் என்ற காங்கிரஸ்காரரும் கட்சியிலிருந்து வெளியேறி, அண்ணு அவர்களுக்காகத் தேர்தல் வேலைகளில் மிகுந்த உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து தென்னுட்டவர் துரத்தப்படும் கொடுமை

28 மாதங்களில் 41 ஆயிரம் பேர் வெளியேறியுள்ளனர்

கொழும்பு, பிப். 26—

தமிழர்களைத் துரத்துவது என்ற சிங்கள சர்க்காரின் திட்டத்திற்குப் பலியாகி இதுவரையில் 41,000 பேர் இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பாதிப்பேர்வரை தாமாகவே, இனியும் இலங்கையில் பிழைக்க முடியாது என்று கருதி வெளியேறினராம்!

எஞ்சியோர், இலங்கை சர்க்கார் தந்த 'வெளியேறுக' என்ற நோட்டீசுகளுக்குப் பணிந்து வெளியேறியவர்கள் என்றும் தெரியவருகிறது.

கடந்த 1954 செப்டம்பர் இங்கள் முதல் 28 மாதங்களில் இவர்கள் வெளியேறினர் என்றும் தெரியவருகிறது.

தேர்தல் கூட்டங்கள்

ஆயிரம் விளக்கு

28—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை - ஆயிரம்விளக்கு, மக்கி மாநகர், பேகம்சாயபு தெருவில் வள்ளுவர் மன்றச் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் சா. து. லோகநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் பேசுவர்.

சென்னை - எடப்பாளையம்

1-3-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை - எடப்பாளையம் பொன்னப்பச் செட்டி தெருவில் (கந்தசாமி கோயில் அருகில்) 27-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தி. மு. கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் வி. ஜி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், வி. எஸ். கோவிந்தராசன், தோழியர் அருதா ஆகியோர் பேசுவர். தோழர்கள் இராதாமாணிக்கம், ஆர். கோவிந்தன் குழுவினர் இசை நிகழ்ச்சிகள் உண்டு.

சென்னை—இராயபுரம்

1—3—57 மாலை 6 மணிக்கு சென்னை இராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டையில் சென்னை—வண்ணை தையற்கலை தொழிலாளர் சார்பில் வண்ணைத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் ஜெயக்ந்ம் தலைமையில் நடைபெறும். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, தோழர்கள் கே. எம். கண்ணபிரான், எம். எஸ். கே. உலகநாதன், டி. வி. ராமன், பி. எஸ். மணி ஆகியோர் பேசுவர்.

திருவல்லிக்கேணி

1—3—57 இரவு 7 மணிக்கு, சென்னை - திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலி தெருவில் தேர்தல் கூட்டம் தோழர் தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சைதை - சம்பந்தம், சே. மு. காதர், எல். கோபால், தோழியர் ஜி. பி. அருதா ஆகியோர் பேசுவர்.

இராயப்பேட்டை

2—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை - இராயப்பேட்டை (புதுப்பேட்டை) பி. வி. கோயில் தெரு அருகிலுள்ள திடலில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் சோ. சி. சந்திரோதயம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. ஆர். கோகுலகிருட்டிணன், கோ. இளவரசு ஆகியோர் பேசுவர்.

சென்னை 5-வது வட்டம்

1—3—57 இரவு 7 மணிக்கு, சென்னை - கத்திவாக்கம் ஐரோட், போஜராஜ நகர் 'மெட்ரூஸ் பென்சில் பாக்டரி' அருகில், சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை - பேசின்பிரிட்ஜ் தொகுதி கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் என். கோபால் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. கே. வில்வம், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்), தோழியர் அருள்மொழி-வில்வம் ஆகியோர் பேசுவர்.

சைதாப்பேட்டை:

1—3—57 மாலை 6 மணிக்கு சென்னை — சைதாப்பேட்டை தண்ணீர்தொட்டி அருகில், தி. மு. கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. எஸ். ஜேசுபாதம் ஆகியோரை ஆதரித்து தேர்தல் கூட்டம் தோழர் சைதை-சம்பந்தம் தலைமையில் நடைபெறும். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் க. அறிவழகன், பி. ஆர். கோகுலகிருட்டிணன் ஆகியோர் பேசுவர்.

சென்னை - புரசைவாக்கம்:

1—3—57 இரவு 7 மணிக்கு, சென்னை — புரசைவாக்கம் லாடர்ஸ் கேட் அருகில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி.பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கோகுலகிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

சிந்தாதிரிப்பேட்டை:

1—3—57 இரவு 8 மணிக்கு, சென்னை — சிந்தாதிரிப்பேட்டை ஆர்த்தசேரியில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க.அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஜார்ஜ் ஆகியோர் பேசுவர்.

* * *

2—3—57 மாலை 6 மணிக்கு சென்னை — சிந்தாதிரிப்பேட்டை பழனி ஆண்டவர் கோவில் தெருவில், தி. மு. கழக அபேட்சகர்கள் க. அன்பழகன், பி. பாலசுப்பிரமணியம் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் ப. க. வேணுகோபாலன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். சீவரத்தினம், க. அன்பழகன், க. அறிவழகன், ஏ. கே. வில்வம், சுரதா, அ. பொ. அரசு ஆகியோர் பேசுவர்,

சென்னை - சி.ஐ.டி. நகர்

1—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை சி.ஐ.டி. நகர் கலெக்டர் காரியாலயத்திற்கு எதிரில், 47-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில் தோழர் குமாரசாமி தலைமையில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், பி. ஆர். கோகுலகிருட்டிணன், ஏ. எஸ். ஜேசுபாதம், சே. மு. காதர் ஆகியோர் பேசுவர்.

மவுண்ட்ரோடு:

2—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—மவுண்ட்ரோடு அப்பாவு கிராமணி தெருவில், தி.மு. கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்து 39-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தேர்தல் கூட்டம் தோழர் கிருட்டிணன் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் பேசுவார்.

யானைமலைநரசிங்கம்:

1—3—57 இரவு 7 மணிக்கு, மதுரை மாவட்டம் மேலூர் தொகுதி யானைமலை நரசிங்கத்தில், தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் பி. நரசிம்மம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. சமநர்மம், ஏ. வேலுசாமி ஆகியோர் பேசுவர்.

மேலூர் தொகுதி தி. மு. கழக தேர்தல் ஊழியர் கூட்டம்

1—3—57 மாலை 3 மணிக்கு, மதுரை மாவட்ட மேலூர் தொகுதிஒத்தக்கடையில் மேலூர் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் ஊழியர் கூட்டம் தோழர் வெள்ளரிப்பட்டி விரனன் தலைமையில் நடைபெறும். அன்று மாலை ஓர் சைக்கிள் ஊர்வலமும் புறப்படும். மேலூர் தொகுதி கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

துறையூர் வாக்காளர் சங்கம்

1—3—57 காலை 7 மணிக்கு துறையூர் அரண்மனை பிள்ளையார் கோவில் எதிரில், வாக்காளர் சங்கச் சார்பில் ஓர் கூட்டம் நடைபெறும். 'வாக்காளர்கள் கடமையும் பொதுத் தேர்தலும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

குறிப்பு:—கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களும் கலந்துகொண்டு தங்களின் கொள்கைகளை விளக்கலாம்.

அண்ணா சொற்பொழிவு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள், ஜஸ்டிஸ் கட்சிக்கே மூலாதார வித்தாக இருந்த சர். தியாகராயர் எவ்வளவு துணிவோடு, வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியமாட்டேன் என்று வாதாடினார்—போராடினார் என்று உங்களுக்குக் கவனமூட்டுவதற்குத்தான்.

"அவர் அப்படிச் சொன்ன பிறகுதான், வெள்ளைக்கார இளவரசன், 'இப்படியும் ஒருதுணிந்த பேர்வழி இந்த நாட்டிலே இருக்கிறார்; அவரை நான் பார்க்க வேண்டும்; அவர் வெள்ளை ஆடையே அணிந்து வந்தாலும் சரி, கருப்பு ஆடையை அணிந்து வந்தாலும் சரி-மேலாடையோடு வந்தாலும் சரி, அப்படிப்பட்டவரைத்தான் நான் பார்க்கவேண்டும்' என்று சொல்லி, வெள்ளைக்கார இளவரசர் அவரைப் பார்த்தார் என்று நான் படித்திருக்கின்றேன். அந்த வெள்ளைக்கார இளவரசர்தான் பிற்காலத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னராக, இங்கிலாந்து நாட்டையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையும் கட்டி ஆண்டவன்.

"இந்தப் பழைய கதையை நான் உங்களுக்குச் சொல்லுவதற்குக் காரணம், சர். தியாகராயர் எப்படிப்பட்ட தியாகி- எந்த அளவுக்குக் கஷ்ட நஷ்டப்பட்டவர், எப்படி பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட காரணத்தாலே தன்னுடைய சொத்து சுகத்தையெல்லாம் இழந்தவர், எப்படித் தமிழ் நாட்டு மக்களுக்காகவே பாடுபட்டார் என்பதை உங்களுக்குக் கவனப்படுத்துவதற்குத்தான்.

'அவர் துவக்கியதுதான் ஜஸ்டிஸ் கட்சி. அவர் மாபெரும் வீரர்—நல்ல தமிழர்—அருமையாகத் தமிழ் நாட்டிற்குப் பணி ஆற்றியவர்— கைத்தறி நெசவாளர்கள் குறைகளைப் போக்குவதற்கு முதல் முதல் பாடுபட்ட ஒரு பெரியார்—அவர் பெயராலே நீங்கள் இந்த மன்றத்தைத் துவக்கி இருக்கிறீர்கள்.

'தமிழகத்தை மதிக்க மறுக்கிறது காங்கிரஸ் தலைமைப் பீடம்'

காங்கிரஸ்வாதியின் குமுறல்!

'வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகிறது; தென்னாட்டுத் தலைவர்களுக்கெல்லாம் வடநாட்டில் கடுகளவு மதிப்புக்கூடத் தரப்படுவதில்லை; டில்லி ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையாகத் தமிழ் மாநில சர்க்கார் இயங்கி, அவர்கள் இட்ட பணிகளைச் செய்து அவர்களது எடுபிடிகளாக இருக்கின்றனர்' என்று திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடத்தில் சென்று உண்மை நிலையை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தின நேரத்திலெல்லாம், நாடாளும் நாயகர்களும், அவர்கள் தங்கள் பக்கபலமாக நினைத்துக் கொண்டிருந்த காங்கிரசாரும் தி. மு. கழகத்தின்மீது தூற்றல் பாணத்தை ஏவினர்; 'வடநாடாவது தென்னாடாவது?' என்று கேலியும் கிண்டலும் மொழிந்தனர். என்றாலும் அவ்வப்போது சில நேர்மையான—நாணயமானகாங்கிரஸ்காரர்கள் மறைமுகமாகவேனும் நமது கருத்துக்களை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இப்போது மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கம்பூர் எனும் கிராமத்தைச் சேர்ந்த கே. நடராசன் எனும் காங்கிரஸ் தோழர் ஒருவர், காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் ஓரவஞ்சனைகளை உணர்ந்து, காங்கிரஸ் இயக்கத்தில் இன்னும் தொடர்ந்து நீடித்திருப்பதில் பயன் கிட்டாது என்பதை உணர்ந்து, தாம் விலகிக் கொண்ட தகவலை நமக்குத் தெரிவித்திருக்கிறார்; அவரது அறிக்கையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்:—

"நான் எனது காலமெல்லாம் அண்ணல் காந்தியார் போன்றோர்மீது கொண்ட மரியாதையின் காரணமாக இதுகாறும் காங்கிரசிலிருந்து பணியாற்றி வந்தேன்.

"இந்தக் காங்கிரஸ், வடநாட்டுத் தலைவர்களுக்குச் செய்தது போல் நமது தமிழகத்தின்ஒப்பற்ற பெருந்தகையான திருவள்ளுவருக்கு ஞாபகச் சின்னம் எழுப்பவோ, மற்றவர்களுக்குச் செய்துள்ளதுபோல் தபால் தலைகளில் உருவம் பொறிக்கவோ அவர்கள் மனந்துணியவில்லை என்பது காண வருந்துகிறேன்.

"தமிழகத்தில் அடித்த புயல், அரியலூர் விபத்து, தேவிகுளம் பீர்மேடு எல்லைப் பிரச்சினை ஆகிய விஷயங்களில் தமிழ் நாட்டை நேரு சர்க்கார் காப்பாற்றவோ, மதிக்கவோ இல்லை.

"இப்படி காங்கிரஸ்காரர்களாலும், அவர்களது தலைமைப் பீடத்தவராலும் தமிழகம் மதிக்கப்படாது எல்லா பிரச்சினைகளிலும் தட்டிக் கழிக்கப்பட்டிருக்கிறது.

"தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, இந்நாட்டிற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் மாற்றக்கூட மறுத்துச் சங்கரலிங்கனாரின் உயிரைக் குடித்ததுடன் மட்டுமல்லாது இன்னும் அது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் வாளாவிருக்கும் காங்கிரஸ்காரர்களையும் காங்கிரஸ் ஆட்சியையும் காண வருந்துகிறேன். எனவே, இந்நாட்டிற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடவும் தமிழ் நாட்டின் கடந்தகால மேதைகளுக்கு ஞாபகச் சின்னங்கள் எழுப்பவும் என் வாழ்நாளைச் செலவழிப்பது என்ற முறையில் இதுவரை எனக்கும் காங்கிரஸ் கட்சிக்கும்இருந்துவந்த தொடர்புகளை நான் அறுத்துக்கொண்டு, அந்தக் கட்சியிசிலிருந்தே விலகிவிட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

மார்ச் 1: உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், விருத்தாசலம் தொகுதிகள்.

காஞ்சியில் கலைவாணர்

காஞ்சி மறுமலர்ச்சிக் கழகச் சார்பில், 1—3—57 மாலை 6 மணிக்கு ரங்கசாமி குளத்தருகில், கலைவாணர் **என். எஸ். கிருஷ்ணன்** அவர்களின் குழுவினருடன் 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சி நடைபெறும்.

பின்னர் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் **அண்ணா** அவர்கள் பேசுவார்கள்.

காஞ்சி தொகுதியில் அண்ணா

நிகழ்ச்சிகள்

மார்ச் 1:

மாலை 4 மணி: புள்ளலூர் கிராமம்

,, 5 மணி: கோவிந்தவாடி கிராமம்

இரவு 7 மணி: காஞ்சிபுரம் ரங்கசாமிகுளம்

(தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் கலந்துகொள்வார்)

மார்ச் 2:

மாலை 6 மணி: காஞ்சீபுரம் கெங்கைகொண்டான் மண்டபம்

[மார்ச் 2-ந் தேதி பொதுக் கூட்டத்தில் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன், டாக்டர் சர். ஏ. இராமசாமி ஆகியோர் கலந்துகொள்வர்.]

தேர்தல் ஊர்வலம்

சென்னை-மவுண்ட்ரோடு:

1—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை — மவுண்ட்ரோடு 39-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையிலிருந்து தி. மு. கழக அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை ஆதரித்து சைக்கிள் ஊர்வலம் புறப்படும். வட்ட கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சைதாப்பேட்டை:

1—3—57 பிற்பகல் 2 மணியளவில், சென்னை—சைதாப்பேட்டை 48-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையிலிருந்து கழக அபேட்சகர்களை ஆதரித்து நெசவாளர் ஊர்வலம் ஒன்று தோழர் ம. ஆ. பொன்னுசாமி தலைமையில் நடைபெறும். வட்டத் தோழர்களும், தியாகராய நகர் கிளைக் கழகம், சார்புடைய மன்றங்கள், படிப்பகங்களிலுள்ள தோழர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முன்னுக்குப்பின்முரண்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வோர் எந்தவகையில் திறமையானவர்களாக இருந்தாலும் அதனால் பயனில்லை. சட்டம் இயற்றுவதற்குப் பழக்கமுள்ள அனுபவம் வாய்ந்த நல்ல நிபுணர்கள் வேண்டும். அப்படிப்பட்ட நிபுணர்கள் இப்பொழுது இல்லை. இருப்பவர்களெல்லாம் ஏதோ சட்டம். எழுதிவிடுகிறார்களே தவிர, அதிலுள்ள முரண்பாடுகளையோ குறைகளையோ கவனிப்பதில்லை."

—கும்பகோணம் வக்கீல்கள் சங்கத்தில் சர். சி. பி.

சென்னை 4-வது வட்ட தி. மு. க. தேர்தல் ஊழியர் கூட்டம்

1—3—57 இரவு 9 மணிக்கு சென்னை—வண்ணை காளிங்கராய முதலி தெரு 8, எண்ணுள்ள 4-வது வட்ட கழக நிலைய எதிரில் தி. மு. கழக தேர்தல் ஊழியர் கூட்டம் நடைபெறும். கழக அபேட்சகர் என். சீவரத்தினம் அவர்களும் கலந்துகொள்வார். கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஸ்ரேல் சண்டித்தனம்

எகிப்திய மண்ணிலிருந்து இஸ்ரேல் படைகள் வாபசாகாமல் சண்டித்தனம் செய்து காலம் தாழ்த்தி வருவதைக் கண்டிக்கும் வகையிலும், அதற்கு எதிர் நடவடிக்கையாகவும், சூயஸ் கால்வாயை சுத்திகரிப்பதை நிறுத்தி வைப்பது எனவும், சிறிய நாட்டின் எண்ணெய்க் கிணறுகளில் வேலையை நிறுத்துவது என்றும் எகிப்து, சிரியா, சவூதிஅரேபியா ஜோர்தான் ஆகிய நாட்டுத் தலைவர்கள் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.